<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 97/2022 நாள்: 07.01.2025 வா.சா.1 – ரேணுகாதேவி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை</u>

1ம் வாதி என் கணவர் தான். என் கணவர் வழக்கில் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளதும், அவர் கூறியுள்ள விவரங்களும் எனக்கு தெரியுமா என்றால் ஆமாம். என் கணவரும், சிவக்குமாரும் 14.12.2021ம் தேதியன்று பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தியுள்ளது எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 12 லட்சத்து 95 ஆயிரம் முன்பணம் பெறப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்களை தவிர இதர வழக்கு விவரங்கள் தெரியாது என்றால் சரியல்ல. என் கணவரும், சிவக்குமாரும் 14.12.2021ம் தேதியன்று பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தியதாகவும், அந்த கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 12 லட்சத்து 95 ஆயிரம் முன்பணம் பெறப்பட்டதாக கூறும் விவரங்கள் உண்மையல்ல என்றும், அதன் அடிப்படையில் வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 12 லட்சத்து 95 ஆயிரம் கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியும். 14.12.2021 அன்று தான் அந்த தொகை கொடுக்கப்பட்டது. என்னுடைய முதல் விசாரணை சாட்சியம், வழக்கிற்கும் என் கணவரின் சாட்சியத்திற்கும், முற்றிலும் முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. கிரைய பத்திரத்திற்கான முத்திரைதாள் தொகை ரூ.50,000/– தயார் செய்து கொண்டு சார் பதிவாளர் அலுவலகத்தில் கிரைய பத்திரம் எழுதிக்கொள்ள தயாராக இருந்ததாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதி 12 லட்சத்து 20 ஆயிரம் என் கணவரிடம் வட்டிக்கு கடனாக தான் பெற்றுக்கொண்டார் என்றும், நான் கூறுவது போல சொத்தை கிரையம் எழுதிக்கொடுப்பதற்காக முன்

பணமாக பெற்றுகொண்டதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. கிரைய பாக்கி தொகை நாங்கள் ரூபாய் 2 லட்சம் செலுத்த வேண்டியுள்ளது. கிரைய பாக்கி தொகை ரூபாய் 2 லட்சம் உள்ளதாக வழக்கில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என் கணவரிடம் பெற்ற கடன் தொகையை திருப்பி செலுத்த எப்போதும் தயாராக இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. சொத்தை கிரையம் பெறுவதற்காக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை என்றும் நாங்கள் கோரியுள்ள மாற்றுப்பரிகாரம் எங்களுக்கு வழங்க ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

C RAJALINGOM

Digitally signed by C RAJALINGOM
Date: 2025.01.07 16:38:08 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.